சிவனுக்கு சேதி சொன்ன கல்வெட்டு...!

திருத்தங்கல்லில் ஒரு பழமைப் பொக்கிஷம்!

விருதுநகர் மாவட்டத்தில் இருக்கிறது திருத்தங்கல். சங்ககாலத்திலேயே புகழ்பெற்ற இவ்வூரை சங்க இலக்கியங்களும், சிலப்பதிகாரமும் 'தங்கால்' எனக் குறிப்பிடுகிறது. இவ்வூரில் கொற்றவை கோயில் இருந்ததை சிலப்பதிகாரம் தெரிவிக்கிறது.

இதன் தொடர்ச்சியாக பண்டைக் காலம் முதலே திருமால் கோயில் அருகே பாறை ஒன்றில் துர்க்கை பெண் தெய்வத்தை புடைப்புச் சிற்பமாக வடித்து மக்கள் வணங்கி வந்துள்ளனர். இது ஆயிரம் ஆண்டுகளுக்கும் முன்பு முற்காலப் பாண்டியர் காலத்தில் வடிக்கப்பட்டதாகும். ஆழ்வார்கள் பாடிய பெருமாள் கோயில் இங்கு மலைமேல் இருக்கிறது. அருகில் இதே மலை மீதே கிழக்கே கருநெல்லிநாதசுவாமிகோயில் எனும் சிவன் கோயில் இருக்கிறது.

இக்கோயில் கல்வெட்டுகளை ஆய்வு செய்து வரும் தொல்லியல் ஆய்வாளர் ஆர்.பாலச்சந்திரன் கூறியதாவது:

கிபி 13ம் நூற்றாண்டில் மாறவர்மன் சுந்தரபாண்டியனின் அமைச்சர்களில் ஒருவரும், மல்லிநாட்டுத் தடங்கண்ணியைச் சேர்ந்தவருமாகிய குருகுலத்தரையன் என்பார், பெருமாள் கோயிலில் கருவறை, அர்த்தமண்டபம், மகா மண்டபம் முதலியன கட்டி திருப்பணிசெய்தார்.

மேலும், இக் கோயிலுக்கு அருகிலேயே கருநெல்லி நாத சுவாமி கோயில் என்ற சிவாலயத்துக்கு கற்றளி (கற்கள் ஒன்றன் மீது ஒன்றாக அடுக்கி கட்டுதல்) யை எழுப்பியுள்ளார். இச்செய்தியிலிருந்து. கி.பி.13ம் நூற்றாண்டளவில் திருத்தங்கல்லில் சைவம், வைணவம் சிறந்திருந்தது தெளிவாகிறது.

கருநெல்லிநாதசுவாமி கோயிலுக்கு கற்றளி எழுப்பிய செய்தியானது இச்சிவாலயத்தின் அர்த்தமண்டபச்சுவரில் (கருவூல அறைப்பகுதியில்) மிக அழகிய பாடலாகப் பொறிக்கப்பட்டுள்ளது. சிவபெருமானைப் பற்றிய புராணக்கதையில் சிவபெருமான் தன்னைப் போலவே ஐந்து தலையுடன் இருந்த முக்கடவுள்களில் ஒருவரான பிரம்மாவைக் கண்டு பொறாமை கொண்டு அவருடைய ஒரு தலையைக் கொய்துவிட்டதாகவும், அதனால் சிவபெருமானுக்கு பிரமஹத்தி தோசம் பிடித்துக் கோண்டதாகவும் கதையுண்டு.

அத் தோசத்தின் காரணமாக சிவபெருமான் கபாலம் ஏந்தி யாசகம் பெற்றதாக புராணக் கதையுண்டு. அதனால் சிவபெருமானுக்கு 'பிச்சாடனர்' எனப் பெயரும் உண்டு. சிறந்த சிவபக்தரான குருகுலத்தரையன் இக்கருநெல்லி நாதசுவாமி கோயிலுக்கு எண்ணிறந்த தானம் செய்வித்ததாகவும், இனிமேல் சிவபெருமான் கபாலமேந்தி யாசகம் பெற வேண்டியதில்லை என்ற பொருளில் பாடல் வடிவில் இந்த கல்வெட்டு அமைக்கப்பட்டுள்ளது.

பழமை காப்போம்

இதுதவிர, பாண்டியநாட்டில் பாண்டியர் வீழ்ச்சிக்குப்பின் நாயக்க மன்னர்களே அனைத்துக் கோயில்களிலும் திருப்பணி செய்து தெய்வப்பணி சிறக்கச் செய்தார்கள். அது போலவே கருநெல்லிநாத சுவாமி கோயிலையும் நாயக்க மன்னர்களே திருப்பணி செய்தும் ஏகப்பட்ட நன்கொடை அளித்தும் சிறக்கச்செய்தனர்.

கருநெல்லிநாதசுவாமி திருக்கோயில் கருவறை வடக்குச்சுவரில் அமைந்த கல்வெட்டு ஒன்று, நாயக்க மன்னன் குமார ரங்கப்பநாயக்கர் இவ்விறைவருக்கு உடைப்பங்குளத்து வருவாயில் கால்பங்கு இறைவன், இறைவி பூசைக்காக கொடுக்கப்பட்ட செய்தியைத் தெரிவிக்கிறது. மேலும் ஒரு கல்வெட்டு, தும்பிச்சி நாயக்கனுக்குப் புண்ணியமாக திருக்குளத்தான் உபயம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வூருக்கு வடக்கே சுமார் 5 கிமீ தொலைவில் உள்ள உருண்டைப்பாறையில் கல்வெட்டு ஒன்று அன்னதானக் கட்டளைக்காக கருநெல்லிசுவாமி தெய்வதாயத்துக்கு வடக்கே நிலம் திருத்தி விடப்பட்டதைத் தெரிவிக்கிறது. மேலும் இந்த 'தன்மத்திற்கு அகுதம் பண்ணினவன் கெங்கைக் கரையிலே காராம்பசுவைக் கொன்ற தோசத்திலேயும் மாதா பிதாவைக் கொன்ற தோசத்திலேயும் போகக்கடவன்' என உரைக்கின்றது.

பாண்டியர் காலம் முதல் நாயக்க மன்னர் காலம் வரை இக்கோயில் மிகச்சிறப்புடன் விளங்கியதை கல்வெட்டுக்களால் அறிய முடிகிறது. இக்கோயிலுக்கு தென்புறம் குன்றின் மேல் முருகன் கோயில் அமைந்துள்ளது. பிற்காலத்தில் இதனை அழகுபடுத்தியதில், இப்பகுதியே ஆன்மிக அழகில் ஜொலிக்கிறது. சைவ, வைணவக் கோயில்கள் அருகருகே கட்டப்பட்டு சிறப்புடன் விளங்கியமை அக்காலம் முதல் இப்பகுதியில் மக்கள் சமயப் பொறையுடன் விளங்கியதற்கு சாட்சி பகிர்ந்து நிற்கிறது.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

தமிழர் வாழ்வியலோடு இணைந்த நீர்நிலைகள்...!

தெரிஞ்சுக்குவோம் வாங்க!

தண்ணீர் அன்பின் அடையாளம்... உலகின் உயிர். தண்ணீரை யாராலும் உற்பத்தி செய்ய முடியாது. உணவாக, உணவு உற்பத்தியிலும் பங்கேற்கிற தண்ணீரை, இந்நீர் நிலைகளை காலம் காலமாக நம் தமிழர்கள் போற்றிக் காப்பதிலும், நீர் சேமிப்பை நடைமுறைப்படுத்துவதிலும் அதிகமதிகம் அக்கறை காட்டினர். தமிழர்கள் வாழ்வில் இப்படி நீர்நிலைகள் ஏராளம். இதோ வாசிப்பிற்குச் சில..

அகழி - கோட்டையின் புறத்தே அகழ்ந்தமைக்கப்பட்ட நீர் அரண்.

அருவி - மலை முகட்டில் தேங்கிய நீர் குத்திட்டு விழுவது.

ஆழிக் கிணறு - கடலுக்கு அருகே தோண்டி கட்டிய கிணறு.

ஆறு - பெருகி ஓடும் நதி.

இலஞ்சி - பல வகைக்கும் பயன்படும் நீர் தேக்கம்.

உறை கிணறு - மணற்பாங்கான இடத்தில் தோண்டி சுடுமண் வலையமிட்ட கிணறு.

ஊருணி - மக்கள் பருகும் நீர் நிலை.

ஊற்று - பூமிக்கடியிலிருந்து நீர் ஊறுவது.

ஏரி - வேளாண்மை பாசன நீர் தேக்கம்.

ஓடை - அடியிலிருந்து ஊற்று எடுத்து, எப்பொழுதும் வாய்க்கால் வழி ஓடும் நீர்.

கட்டு கிணறு - சரளை நிலத்தில் வெட்டி, கல், செங்கல் இவைகளால் சுவர் கட்டிய கிணறு.

கடல் - சமுத்திரம்.

கம்வாய் (கம்மாய்) - பாண்டிய மண்டலத்தில் ஏரிக்கு வழங்கும் பெயர்.

கலிங்கு- ஏரி முதலிய பாசன நீர் தேக்கம் உடைப்பெடுக்காமல் இருப்பதற்கு முன் எச்சரிக்கையாக கற்களால் உறுதியாக்கப்பட்ட பலகைகளால் அடைத்து திறக்கக்கூடியதாய் உள்ள நீர் செல்லும் அமைப்பு.

கால் (சேனல்) - நீரோடும் வழி.

கால்வாய் - ஏரி, குளம் ஊருணி இவற்றிக்கு நீர் ஊட்டும் வழி.

குட்டம் - பெருங் குட்டை.

குட்டை - சிறிய குட்டம். மாடு முதலியன குளிப்பாட்டும் நீர் நிலை.

குண்டம்- சிறியதாக அமைந்த குளிக்கும் நீர் நிலை.

குண்டு - குளிப்பதற்கேற்ற சிறு குளம்.

குமிழி - நிலத்தின் பாறையை குடைந்து அடி ஊற்றை மேலெழுப்பி வரச்செய்த குடை கிணறு.

குமிழி - ஊற்று அடி நிலத்து நீர் நிலமட்டத்திற்கு கொப்பளித்து வரும் ஊற்று.

குளம் - ஊர் அருகே உள்ள மக்கள் குளிக்கப்பயன்படும் நீர் நிலை.

கூவம் - ஒரு ஒழுங்கில் அமையாத கிணறு.

கூவல் - ஆழமற்ற கிணறு போன்ற பள்ளம்.

வாளி - ஆற்று நீர் தன் ஊற்று நீரால் நிரப்பி மறுகால்வழி அதிக நீர் வெளிச் செல்லுமாறு அமைந்த அல்லது அமைக்கப்பட்ட நீர்நிலை.

கேணி - அகலமும், ஆழமும் உள்ள ஒரு பெருங் கிணறு.

சிறை - தேக்கப்பட்ட பெரிய நீர் நிலை.

சுனை - மலையிடத்து இயல்பாயமைந்த நீர் நிலை.

சேங்கை - பாசிக்கொடி மண்டிய குளம்.

தடம் - அழகாக நாற்புறமும் கட்டப்பட்ட குளம்.

தளிக்குளம் - கோயிலின் நாற்புறமும் சூழ்ந்தமைந்த அகழி போன்ற் நீர் நிலை.

தாங்கல் - இப்பெயர் தொண்ட மண்டலத்தை ஒட்டிய பகுதியில் ஏரியை குறிக்கும்.

திருக்குளம் - கோயிலை ஒட்டி அமைந்த நீராடும் குளம். இது புட்கரணி எனவும் பெயர் பெறும்.

தெப்பக்குளம் - நடைபாதையுடன் கூடிய, தெப்பம் சுற்றி வரும் குளம்.

தொடு கிணறு - ஆற்றில் அவ்வப்போது மணலைத்தோண்டி நீர் கொள்ளும் இடம்.

நடை கேணி - இறங்கிச் செல்லும் படிக்கட்டமைந்த பெருங் கிணறு.

நீராவி - மைய மண்டபத்துடன் கூடிய பெருங் குளம். ஆவி என்றும் கூறப்படும்.

பிள்ளைக்கிணறு - குளம் ஏரியின் நடுவே அமைந்த கிணறு.

பொங்கு கிணறு - ஊற்றுக்கால் கொப்பளித்துக்கொண்டே இருக்கும் கிணறு.

பொய்கை - தாமரை முதலியன மண்டிக்கிடக்கும் இயற்கையாய் அமைந்த நீண்டதொரு நீர் நிலை.

மடு - ஆற்றிடையுடைய அபாயமான பள்ளம்.

மடை - ஒரு கண் உள்ள சிறு மதகு.

மதகு - பல கண்ணுள்ள ஏரி நீர் வெளிப்படும் பெரிய மடை அடைப்பும், திறப்பும் உள்ளது.

மறுகால் - அதிக நீர் கழிக்கப்படும் பெரிய வாய்க்கால்.

வலயம் - வட்டமாய் அமைந்த குளம்.

அருமை வாசகர்களே... பழமை ஆர்வலர்களே...

நம்மூர்களில் காலம் கடந்து நிற்கிற அத்தனையும் அடையாளங்களே. செவ்வாய் தோறும் வெளிவரும் 'பழமை காப்போம்!' பகுதிக்கு உங்கள் பகுதியின் தொன்மை அடையாளங்களின் வரலாற்று பெருமைகளை, அவற்றை காக்கும் அவசியத்தை சுருக்கமாக சுவையாக உரிய தரமான படங்களுடன் அனுப்பி வையுங்கள்...

முகவரி:
பழமை காப்போம்!
தினகரன்,
2/2, மேலூர் மெயின்ரோடு,
உத்தங்குடி,மதுரை - 625 023

குஜிலியம்பாறையில்

தேவாலய திருவிழா தேர்பவனி

குஜிலியம்பாறை தேவாலய திருவிழாவையொட்டி சப்பர பவனி நடைபெற்றது.

குஜிலியம்பாறை, ஜூலை 2: குஜிலியம்பாறை கிறிஸ்தவ தேவாலயத்தில் ராயப்பர், சின்னப்பர் திருவிழாவில் தேர்பவனி நடைபெற்றது.

குஜிலியம்பாறை கிறிஸ்தவ தேவாலயத்தில் திருவிழா கொண்டாடப்பட்டது. இதையொட்டி, குஜிலியம்பாறை, பாளையம், ராமகிரி, கோவிலூர், டி.கூடலூர் ஆகிய ஊர்களில் இருந்து கிறிஸ்தவர்கள் கலந்து கொண்டு தேவாலயத்தில் வழிபாடு செய்தனர். முன்னதாக கொடியேற்றமும், திருவிழா திருப்பலியும், பொன்விழா நினைவாக சமபந்தி விருந்தும் நடந்தது.

அதனை தொடர்ந்து ராயப்பர், சின்னப்பர் புனிதர்களின் சப்பர தேர்பவனி பஸ் ஸ்டாண்டு சாலை, கடைவீதி, காமராஜர் சிலை சாலை வழியாக வீதி உலா சென்றது. அப்போது புனிதர்களுக்கு சம்மனசு மாலை அணிவித்தல், நீரூற்றல், ஆரத்தி எடுத்தல், உப்புக்கள் செலுத்துதல் நிகழ்ச்சிகள் நடந்தது. பின்னர் சப்பர மீண்டும் தேவாலயம் சென்றடைந்தது. இதில் பங்குதந்தை, கன்னியாஸ்திரிகள், ஊர்பெரியதனம், பங்கு மக்கள் கலந்து கொண்டனர்.

திண்டுக்கல் கால்பந்து லீக் போட்டி

திண்டுக்கல், ஜூலை 2: திண்டுக்கல் மாவட்ட கால்பந்து கழகம் சார்பில் லீக் போட்டியில் நடைபெற்று வருகிறது.

கடந்த இரண்டு நாட்களாக நடைபெற்ற போட்டிகளின் விவரம்- பிரிமியர் டிவிசன் போட்டியில், ஜி.டி.என்., கல்லூரி அணி, ராக்போர்ட் ஸ்போர்ட்ஸ் கிளப் அணியை 5-1 என்ற கோல் கணக்கில் வென்றது. காந்தி கிராம பல்கலை அணி, காமராஜபுரம் அணியை 1-0 என்ற கோல் கணக்கில் வென்றது. ஜி.டி. என் கல்லூரி அணி, அனுமந்தராயன் கோட்டை லயோலா அணியை 1-0 என்ற கோல் கணக்கில் வென்றது. ராக்போர்ட் ஸ்போர்ட்ஸ் கிளப் அணி, காந்தி கிராம பல்கலை அணியை 3-2 என்ற கோல் கணக்கில் வென்றது.

ஜி.டி.என். கல்லூரி அணி, காந்தி கிராம பல்கலை அணியை 3-1 என்ற கோல் கணக்கில் வென்றது.

ஜி.டி.என்., கல்லூரி அணி, நிலக்கோட்டை சோலார் அணியை 6-0 என்ற கோல் கணக்கில் வென்றது.

முதல் டிவிசன் போட்டியில், கொடைக்கானல் கே.எப்.டபிள்யூ.ஏ. அணி, சச்சின் சாக்கஸ் அணியை 2-0 என்ற கோல் கணக்கில் வென்றது. தோட்டனூத்து ஸ்டார் கால்பந்து அணி, சச்சின் சாக்கஸ் அணியை 3-0 என்ற கோல் கணக்கில் வென்றது. மைக்கேல் பாளையம் செயின்ட் மைக்கேல் அணி, திண்டுக்கல் அரசு மேல்நிலைப் பள்ளி முன்னாள் மாணவர்கள் அணியை 1-0 என்ற கோல் கணக்கில் வென்றது. மைக்கேல் பாளையம் செயின்ட் மைக்கேல் கால்பந்து அணி, நிலக்கோட்டை ஸ்டார் சோலார் கால்பந்து அணியை 4-0 என்ற கோல் கணக்கில் வென்றது. நிலக்கோட்டை ஸ்டார் சோலார் அணி, திண்டுக்கல் காமராஜபுரம் அணிகளுக்கு இடையே நடைபெற்ற போட்டி கோல்கள் இன்றி டிராவில் முடிவடைந்தது.இரண்டாவது டிவிசன் போட்டியில், ஜெயின்ட் ஜோசப் மில்ஸ் அணி, லயன் தெரு கால்பந்து அணியை 1-0 என்ற கோல் கணக்கில் வென்றது. வத்தலகுண்டு ராயல் கால்பந்து அணி, திண்டுக்கல் கார்நேஷன் அணியை 3-0 என்ற கோல் கணக்கில் வென்றது.

நான்காம் டிவிசன் போட்டியில், அன்னை ஸ்போர்ட்ஸ் கால்பந்து அணி, பீலே ஸ்போர்ட்ஸ் கிளப் அணியை 2-1 என்ற கோல் கணக்கில் வென்றது. கீதா டிம்பஸ் கால்பந்து அணி, ஞானம் மெமோரியல் கால்பந்து அணியை 5-2 என்ற கோல் கணக்கில் வென்றது. ஜி.எஸ். ஸ்போர்ட்ஸ் கிளப் அணி, செயின்ட் ஜோசப் பாலிடெக்னிக் அணியை 6-1 என்ற கோல் கணக்கில் வென்றது. இந்த தகவலை மாவட்ட கால்பந்து கழக செயலாளர் சண்முகம் தெரிவித்துள்ளார்.

பைக் மீது ஆட்டோ மோதி அமமுக பிரமுகர் பலி

பழநி, ஜூலை 2: பழநி அருகே பாலசமுத்திரத்தைச் சேர்ந்தவர் முருகேசன் (50). பாலசமுத்திரம் அமமுக பேரூர் செயலாளராக இருந்தார். சம்பவத்தன்று பழநி டவுன், ரயில்வே பீடர் சாலையில் பைக்கில் சென்று கொண்டிருந்தார். அப்போது எதிரே வந்த ஆட்டோ பைக் மீது மோதியது. இதில் முருகேசன் தலையில் அடிபட்டு படுகாயமடைந்தார். உயிருக்கு ஆபத்தான நிலையில் கோவை அரசு மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார். அங்கு அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். இதுகுறித்து பழநி டவுன் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

கடந்த சில நாட்களாகவே ரயில்வே பீடர் சாலையில் ரயில் நிலையத்திற்கு செல்லும் ஆட்டோக்கள் அசுர வேகத்தில் செல்வதாக புகார் எழுந்து வந்தன. எனவே, போக்குவரத்து போலீசார் மற்றும் வட்டார போக்குவரத்து அலுவலர்கள் இச்சாலையில் வாகன தணிக்கையில் ஈடுபட்டு விதி மீறும் ஆட்டோக்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பட்டதாரி வாலிபர் தற்கொலை

திண்டுக்கல், ஜூலை 2: திண்டுக்கல் அருகே சின்ன பொன்மாந்துரையைச் சேர்ந்தவர் அற்புதராஜ் மகன் அமித் சார்லஸ் சந்தியாகு (20). பிஎஸ்சி பட்டதாரி. இவரை பெற்றோர் எம்எஸ்சி படிக்க வற்புறுத்தியதால், மனமுடைந்த அமித் சார்லஸ் சந்தியாகு அவரது வீட்டில் தூக்கு போட்டு தற்கொலை செய்து கொண்டார். தாலுகா போலீசார் வழக்கு பதிந்து விசாரிக்கின்றனர்.

தாவரப் பூவா? காகிதப் பூவா?

தாவரப் பூவா? காகிதப் பூவா என கண் மயங்க வைக்கும் வெள்ளை காகிதப் பூக்கள். இடம்: திண்டுக்கல் மடூர்.

pnb Housing Finance Limited Ghar Ki Baat

பிற்சேர்க்கை-IV-A அசையாச் சொத்து(கள்) மின்-ஏலம்-பொது விற்பனை அறிவிப்பு

பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம் 2002 மற்றும் கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இன் விதி 6)8) விதிமுறையுடன் அசையாச் சொத்துகள் விற்பனைக்கான மின்-ஏலம்-விற்பனை அறிவிப்பு.

பதிவு அலுவலகம்: 9ஆவது தளம், அந்தரிக்ஷ் பவன், 22, கே.ஜி. மார்க், புதுடெல்லி-110001, தொலைபேசி: 011-23357171, 23357172, 23705414, இணையதளம்: www.pnbhousing.com

கிளை முகவரி: நந்தினி பில்டிங், 3 ஆவது தளம், 48, பைபாஸ் ரோடு, மதுரை-625010 | கிளை அலுவலகம்: : புதிய எண்.6, பழைய எண்.8, இரண்டாவது தளம், சாஸ்திரி நகர், ஸ்ரீனிவாசபுரம், மகாத்மாகாந்தி பள்ளி அருகில், தென்னூர், திருச்சி-620 017.

இதன்மூலம் பொதுமக்களுக்கு பொதுவாக மேலும் நிரல் எண்–A இல் குறிப்பிட்டுள்ள கடன்தாரர்(கள்) & ஜாமீன்தாரர்(கள்) ஆகியோருக்கு குறிப்பிட்டு வழங்கப்படும் அறிவிப்பாவது கடனீட்டோரிடம் அடமானம்/உரிமை அளிக்கப்பட்ட, M/s. பிஎன்பி ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் (பிஎன்பி எச்எஃப்எல்)/ கடனீட்டோரின் அதிகாரப்பூர்வ அதிகாரியால் ஆக்கப்பூர்வ/கையக சுவாதீனம் (நிரல் எண்– C இல் விவரிக்கப்பட்டவாறு) செய்யப்பட்டிருக்கும் நிரல் எண்–D இல் குறிப்பிட்டுள்ள கீழே விவரிக்கப்பட்ட அசையாச் சொத்து(கள்) ஆனது, "உள்ளது உள்ளவிடத்தில், உள்ளது உள்ளவாறு மேலும் உள்ளது எதுவோ அது அடிப்படையில்" விற்பனை செய்யப்பட உள்ளது. நாளது தேதிய திருத்தப்படி கடனீட்டுச் சொத்து உரிமை அமலாக்கம் விதிகள், 2002 இன் விதி–8(6) & 9 கீழ் நிரல் எண்–A இல் குறிப்பிட்டவாறு கடன்தாரர்(கள்)/அடமானதாரர்(கள்) மற்றும் கடன்தாரர்/ அடமானதாரர்(கள்) (இறந்தது முதல்) ஆகியோரின் சட்டப்பூர்வ வாரிசுகள், சட்டப்பூர்வ பிரதிநிதி, (தெரிந்தது அல்லது தெரியாதது), நிறைவேற்றும் அதிகாரதாரர்(கள்), நிர்வாகி(கள்), வாரிசு(கள்), உரிமையுற்றோர்(கள்) ஆகியோருக்கு இதன்மூலம் அறிவிப்பு வழங்கப்படுகிறது. விரிவான விற்பனை விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு, M/s. பிஎன்பி ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் (பிஎன்பிஎச்எஃப்எல்), கடனீட்டு கடனீந்தோர் இணையதளம் அதாவது www.pnbhousing.com இல் கொடுக்கப்பட்ட இணைப்பினைப் படிக்கவும்.

கடன் எண்/ கடன்தாரர்/ உப-கடன்தாரர்/ ஜாமீன்தாரர்(கள்)/ சட்டப்பூர்வ வாரிசுகள் பெயர் (A)	கோரப்பட்ட தொகை & நாள் (B)	சுவாதீனம் தன்மை (C)	அடமானச் சொத்துகள் விவரம் (D)	நிர்ணய விலை (RP) (E)	முன்வைப்புத் தொகை(நிர்ணய விலையின் 10%) (F)	ஏலப்புள்ளி சமர்ப்பிக்க கடைசி நாள் (G)	ஏலம் உயர்த்தும் விகிதம்(H)	பார்வையிடும் நாள் & நேரம் (I)	ஏலம் நாள் & நேரம் (J)	தெரிந்த வில்லங்கங்கள்/ நீதிமன்ற வழக்கு ஏதேனுமிருந்தால், (K)
HOU/TRHY/0422/980275 காரத்திகை வேலு V / K தனலட்சுமி கி.அ.: திருச்சி	31-07-2023 தேதியின்படி ரூ. 32,52,976.00/-	(கையக)	சொத்தின் அட்டவணை: திண்டுக்கல் மாவட்டம், பழனி பதிவு மாவட்டம், வடமதுரை சார் பதிவு மாவட்டம், திண்டுக்கல் கிழக்கு வட்டம், தாமரைப்பட்டி கிராமம், 1) சர்வே எண். 145/1B மொத்த பரப்பளவு ஏக்கர் 0.12 செண்ட்களுக்குச் சமமான ஹெக்டேர் 0.05.0 ஏர்ஸ் 2) சர்வே எண். 145/1A மொத்த பரப்பளவு ஏக்கர் 4.73 செண்ட்களுக்குச் சமமான ஹெக்டேர் 1.91.5 ஏர்ஸ் இல் உள்ள 0.31 செண்ட்கள் உள்ள நிலம் கீழ்வரும் நான்கு எல்லைகளைக் கொண்டது. எல்லைகள்: தெற்கில்: முகமது யூசுப் நிலம், மேற்கில்: சர்வே எண். 144A/4A இல் உள்ள நிலம், வடக்கில்: சகாபுதீன் நிலம், கிழக்கில்: UDR சர்வே எண். 145/1A2, ஹைதர் அலி நிலம் 3) சர்வே எண். 145/1A மொத்த பரப்பளவு ஏக்கர் 1.45 செண்ட்களுக்குச் சமமான ஹெக்டேர் 0.59.0 ஏர்ஸ் இல் உள்ள 1.40 செண்ட்கள் உள்ள நிலம் கீழ்வரும் நான்கு எல்லைகளைக் கொண்டது. எல்லைகள்: வடக்கின் கிழக்கில்: கிணறு, ஹைதர் அலி நிலம், தெற்கில்: கார்த்திகேயன் நிலம், மேற்கில்: சர்வே எண். 145/1B & 144A/4, 144A/4B 4) சர்வே எண். 139/1 மொத்த பரப்பளவு ஏக்கர் 0.40 செண்ட்களுக்குச் சமமான ஹெக்டேர் 0.16.0 ஏர்ஸ் 5) சர்வே எண். 139/2 மொத்த பரப்பளவு ஏக்கர் 1.30 செண்ட்களுக்குச் சமமான ஹெக்டேர் 0.52.5 ஏர்ஸ் 6) சர்வே எண். 139/3, மொத்த பரப்பளவு ஏக்கர் 0.11 செண்ட்களுக்குச் சமமான ஹெக்டேர் 0.04.5 ஏர்ஸ், பட்டா எண்.1559, சர்வே எண். 139/3 A, ஹெக்டேர் 0.04.5 ஏர்ஸ், 7) சர்வே எண். 140/1, மொத்த பரப்பளவு ஏக்கர் 0.82 செண்ட்களுக்குச் சமமான ஹெக்டேர் 0.33.0 ஏர்ஸ், துணைப் பிரிவு சர்வே எண். 1559, சர்வே எண். 144A/1A1A ஹெக்டேர் 0.27.94 ஏர்ஸ், 8) சர்வே எண். 140/2, மொத்த பரப்பளவு ஏக்கர் 0.85 செண்ட்களுக்குச் சமமான ஹெக்டேர் 0.34.5 ஏர்ஸ், தற்போதைய எண். 1559, சர்வே எண். 140/2A1A பரப்பளவு ஹெக்டேர் 0.32.24 ஏர்ஸ். மொத்த நிலம் வீட்டு மனைகளாக மாற்றப்பட்டு நவீன் நகர் பிளாக் II என்ற பெயரில் உள்ள பகுதியில் மனை எண்.91 இன் அளவீடு: கிழக்கு – மேற்கு இருபக்கங்களிலும் 42 அடி, வடக்கு தெற்கு இருபக்கங்களிலும் 35 அடி, மொத்த பரப்பளவு 136.57 ச.மீட்டருக்குச் சமமான 1470 ச.அடி. தற்போதைய அளவீட்டின்படி, கிழக்கு – மேற்கு இருபக்கங்களிலும் 42 அடி, வடக்கு தெற்கு இருபக்கங்களிலும் 33 ¾ அடி, மொத்த பரப்பளவு 131.68 ச.மீட்டருக்குச் சமமான 1417 ½ ச.அடி. அதன் அருகில் 1,314.75 ச.அடி பரப்பளவு உள்ள RCC வீடு கீழ்வரும் நான்கு எல்லைகளைக் கொண்டது. எல்லைகள்: வடக்கில்: 23 அடி அகல கிழக்கு மேற்கு சாலை, தெற்கில்: வடக்கு தெற்காக 01 ¼ x42 நிலம், கிழக்கில்: மனை எண்.92, மேற்கில்: மனை எண்.90, மொத்த பரப்பளவு: 131.68 ச.மீட்டருக்குச் சமமான 1417 ½ ச.அடி. இந்த சொத்து பட்டா எண்.944 இன் படி சர்வே எண். 145/1A1, சர்வே எண்.145/1A1A– ஹெக்டேர் 0.35.88 ஏர்ஸ். இந்த சொத்து 40 அடி அகல திண்டுக்கல்–திருச்சி நெடுஞ்சாலை மற்றும் கிழக்கு மேற்கு, வடக்கு தெற்கு பொது பாதை உரிமைகளைக் கொண்டுள்ளது.	Rs. 28,94,000/-	Rs. 2,89,400/-	16.07.2024	Rs. 10,000/-	04-07-2024 நேரம்: காலை 10.00 மணி - மாலை 5.00 மணி	17-07-2024 நேரம்: பிற்பகல் 01.00 மணி - பிற்பகல் 2.00 மணி	*இல்லை/ அறியப்படவில்லை

*பொருந்துமாறு ஆண்டுக்கு 18% விகிதத்தில் மேற்கொண்டு வட்டி, அதற்கான பணப்பட்டுவாடா மற்றும்/அல்லது பணமாக்கும் தேதி வரை ஏற்பட்ட சாதாரண செலவினங்கள், செலவு கட்டணங்கள் ஏனையவற்றுடன் சேர்த்து. ** பிஎன்பி ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெடின் அதிகாரப்பூர்வ அதிகாரிக்கு தெரிந்த மற்றும் அறிந்த வரையில், நிரல் எண்–K இல் அறிவிக்கப்பட்டது தவிர்த்து மேற்குறிப்பிட் அசையா/கடனீட்டுச் சொத்துகள் தொடர்பான பிற வில்லங்கங்கள்/ கோருரிமைகள் இல்லை. மேற்கொண்டு இவ்வித வில்லங்கங்கள் ஆனது வெற்றிபெறும் கொள்முதலாளர்/ஏலதாரர் மூலம் அவருடைய தரப்பில் வழங்கப்பட/செலுத்தப்பட வேண்டும். எதிர்நோக்கும் கொள்முதலாளர்(கள்)/ ஏலதாரர்கள் குறிப்பிட்ட வில்லங்கங்களின் உண்மைத்தன்மையை தனிப்பட்டு உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

1. நாளது தேதிப்படி, நிரல் எண்–K இல் குறிப்பிடப்பட்டுள்ள அசையாச் சொத்துகள்/கடனீட்டுச் சொத்துகளை விற்பனை செய்தல், உரிமை மாற்றுதல் மேலும்/அல்லது விற்றுத் தீர்ப்பதற்கு பிஎன்பிஎச்எஃப்எல் அதிகாரப்பூர்வ அதிகாரியை தடுக்கும் ஆணை மேலும்/அல்லது நீதிமன்ற தடையுத்தரவு எதுவுமில்லை. 2. எதிர்நோக்கும் கொள்முதலாளர்/ஏலதாரர் மற்றும் விருப்பமுள்ள நபர்கள் பிஎன்பிஎச்எஃப்எல் வசமிருக்கும் நிரல் எண்–K இல் குறிப்பிடப்பட்டுள்ள அதற்கு தொடர்பான உரிமைப்பத்திரம் ஆவணப் பத்திரம் உட்பட ஆனால் வரம்புக்குட்படாது தெரிவிக்கப்பட்ட செயல்பாட்டிலுள்ள வழக்குகள்/ வழங்கப்பட்ட ஆணைகள் ஏனையவை ஏதேனுமிருந்தால் அவற்றை தனிப்பட்டு ஆய்வு செய்து கொள்ளலாம். மேலும் ஒப்பந்தப்புள்ளி/ஏலப்புள்ளி விண்ணப்பப் படிவம் சமர்ப்பிக்கும் முன்பு அல்லது ஒப்பந்தப்புள்ளி(கள்) வழங்கும் முன்பு அனைத்து விதத்திலும் தாமாகவே திருப்தியுற வேண்டும். ஏலதாரர்(கள்) ஏலப்புள்ளிப் படிவத்துடன் இந்த ஏலத்தின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளில் கையொப்பமிட வேண்டும். 3. கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இன் விதி 9(3) இன்படி, ஏலதாரர்(கள்)/ கொள்முதலாளர் அதே நாளில் அல்லது அடுத்த வேலை நாளுக்கு மிகாமல் விற்பனை விலையின் 25% தொகையை, (முன்வைப்புத்தொகை ஏதேனும் செலுத்தப்பட்டிருந்தால் அவை உட்பட) செலுத்துவதற்கு சட்டப்பூர்வமாக கட்டுப்பட்டவர். கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இன் விதி 9(2) இன்படி கடனீட்டு கடனீந்தோர் மூலம் விற்பனை விலையின் 25% பெற்ற பிறகு மட்டும் ஏலதாரர்(கள்) பெயரில் விற்பனை உறுதிப்படுத்தப்படும். விற்பனை பரிசீலனைத் தொகையின் மீதி 75% ஆனது விற்பனை உறுதிக் கடிதம் ஒப்புகைத் தேதியிலிருந்து 15 நாட்களுக்குள் கொள்முதலாளரால் செலுத்தப்பட வேண்டும் மேலும் இவ்விதம் செலுத்தத் தவறினால், சர்ஃபாசி சட்டத்தின் விதிகளின்படி சொத்து/ கடனீட்டுச் சொத்து மறுவிற்பனை செய்யப்படும். 4. மனை எண்.68, மூன்றாவது தளம், செக்டார் 44, கூர்கயான், ஹரியானா–122003 இல் கார்ப்பரேட் அலுவலகத்தைக் கொண்டுள்ள M/s சி1 இந்தியா பிரைவேட் லிமிடெட் ஆனது மின்–ஏலம் மூலம் விற்பனை நடத்துவதில் அதிகாரப்பூர்வ அதிகாரிக்கு உதவும். இணையதளம் www.bankeauctions.com.சொத்து பார்வையிடுதல் அல்லது ஏலப்புள்ளி ஆவணங்கள் பெறுதல் தொடர்பான அனைத்து உதவிக்கு மேலும் அனைத்து பிற விசாரணைக்கு அல்லது பதிவுபெறுவதற்கு, நீங்கள் பிஎன்பிஎச்எஃப்எல் அதிகாரப்பூர்வ நபர்கள் திரு.பாலசுப்ரமணியன் S/ ஜோதிகண்ணன் S, பூபதி R/ மருதுபாண்டியன்/ செந்தில்குமார்/ கோபிகிருஷ்ணன் R ஆகியோரை கைபேசி எண்.: 89517–38505/ 9840487424/ 9731467976/ 8148101608/ 8147170056/ 9840487424/ 9940087598, மின்னஞ்சல்: auction@pnbhousing.com மூலம் தொடர்பு கொள்ள வேண்டும். அல்லது www.pnbhousing.com காணவும்.

இடம்: மதுரை, திருச்சி, நாள்:- 01.07.2024

ஒம்/- அதிகாரப்பூர்வ அதிகாரி, பிஎன்பி ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்